பக்கங்கள் – 12 | விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40 கதிர் : 167 | 13 மே 2025 செவ்வாய்க்கிழமை | சித்திரை 30 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2056



## தொல்லியல் திணைக்களம் பிக்குகளுடைய கூடாரமா?

### நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி

முல்லைத்தீவு, மே 13

தொல்லியல் பகுதிகளில் கண்காணிக்கும் அதிகாரம் பௌத்த பிக்குகளிடம் கொடுக்கப் பட்டுள்ளதா? தொல்லியல் திணைக் களம் பௌத்த பிக்குகளது கூடாரமா? 11

## நாடாளுமன்ற அதிகாரிகளுக்கும் எரிபொருள் ஒதுக்கீடு குறைப்பு!

(விரிவு: பக்கம் 05)

## பேசாலைக் கடற்பரப்பில்

# 218 கிலோவுக்கு மேற்பட்ட கேரளக் கஞ்சா மீட்பு!

மன்னார், மே 13

மன்னார் பேசாலை கடற்பரப்பில், 218 கிலோவுக்கும் மேற்பட்ட கேரளக் கஞ்சா மீட் கப்பட்டுள்ளதாக இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது. பேசாலை கடற்கரைப் பிரதேசத்தில் இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டன. கஞ்சாப் பொதிகளைக் 11



## அதீத போதைப்பாவனை குடும்பத்தலைவர் சாவு!

யாழ்ப்பாணம், மே 13

அதீத போதைப்பொருள் பாவனை காரணமாக, இளம் குடும்பத்தலைவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். சாவகச்சேரி - மட்டுவில் தெற்குப் பகுதியைச் சேர்ந்த குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். ஊசிமூலம் நீண்டகாலமாக 11




# போதை மரணங்கள் யாழில் அதிகரிப்பு!

## ஒரு வாரத்துக்குள் மட்டும் நால்வர் பலி

## கைதுகளும் தொடர்ச்சியாக அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணத்தில் போதைப் பொருள் பாவனையால் ஏற்படும் உயிரிழப்புகள் மீண்டும் சடுதியாக அதிகரித்து வருகின்றன என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். 11

## அமைச்சரவை மறுசீரமைப்பு; அரசாங்கம் அதீத கவனம்?

(விரிவு: பக்கம் 03)

### வெளிநாட்டுக்கு அனுப்புவதாக மோசடி:

## பொலிஸ் அலுவலருக்கு விளக்கமறியல்!

யாழ்ப்பாணம், மே 13

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக்கூறி மோசடியில் ஈடுபட்ட பொலிஸ் அலுவலர் ஒருவர், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். 11

### நெடுந்தீவு மருத்துவமனைக்கு

## அனுப்பப்பட்டது மின்பிறப்பாக்கி

யாழ்ப்பாணம், மே 13

நெடுந்தீவில் கடந்த மூன்று நாள்களாக ஏற்பட்டிருந்த மின் தடை சீரமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. நெடுந்தீவில் கடந்த 10ஆம் திகதிமுதல் ஏற்பட்ட இந்தத் தடை காரணமாக, பொதுமக்களும் மருத்துவமனை நிர்வாகத்தி 11

### பாலியல் வன்கொடுமைக்கு எதிராக

## யாழில் இன்று போராட்டம்!

யாழ்ப்பாணம், மே 13

புங்குடுதீவு மாணவி வித்தியா பாலியல் வன்கொடுமைக்கும், வன்புணர்வுக்கும் உட் படுத்திக் கொல்லப்பட்ட பத்தாவது நினைவுதினத்தை முன்னிட்டும், பெண்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு எதிராகவும் யாழ்ப்பாணத்தில் இன்று 11






"உள்ள பிரச்சினையள் பத்தாதெண்டு இந்தப் போதை வேற உயிரை எடுக்குது"

## ஏனைய கட்சிகளில் இருந்து அநுர அணி வேறுபடவில்லை

### இடதுசாரித் தலைவரான குமார் குணரத்தினம் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் விடயத்தில், ஏனைய கட்சிகளுக்கும் ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கும் இடையில் எந்த வேறு 11

## அதிகார மோகத்தில் செயற்படுகிறது அரசு

### பிரேம்நாத் தொலவத்த சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 13

அரசாங்கம் தற்போது அதிகார மோகத்தில் செயற்பட்டுக்கொண்டிருக்கிறது. அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக, தாம் 'கள்வர்கள்' என்று விமர்சித்தவர்களைக்கூட தற் 11

# இனப்படுகொலை நினைவுத்தூபி உறுதியின் அடையாளமாக மாறும்

## கனேடியத் தமிழர் பேரவை தெரிவிப்பு

**ரொறன்ரோ, மே 13**

**கனடாவின் பிரம்டன் நகரில் திறக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி, நீதிக்கும் உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளம் என்று கனேடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.**

தமிழர் இனப்படுகொலை நினைவுச் சின்னம் திறக்கப்பட்ட வரலாற்று நிகழ்வு பிரம்டன் நகரில் நடந்துள்ளது. இலங்கையின் போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழீழ மக்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள இந்த நினைவாலயத்தை கனேடியத் தமிழர் பேரவை ஆதரிக்கின்றது. இந்த நினைவுச்சின்னம் நீதிக்கும், உண்மைக்கும் தமிழர்கள் மேற்கொள்ளும் தொடர்ச்சியான பயணத்தின் உறுதியான அடையாளமாக அமைந்துள்ளது. இந்த வரலாற்றுச் சம்பவத்தை சாத்தியமாக்கிய பிரம்டன் நகரசபைக்கும், மேயர் பாட்ரிக் ப்ரவுனுக்கும், அனைத்து ஏற்பாட்டாளர்கள் மற்றும் நன்கொடையாளர்களுக்கும் கனேடியத் தமிழர் பேரவை நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றது என்று கனேடியத் தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. (எ-இ)



# திஸ்ஸ விகாரைக்கு எதிராக நேற்றும் மக்கள் போராட்டம்



யாழ்ப்பாணம், மே 13

சட்டவிரோதமாக மக்களது காணிகளை சுவீகரித்துக் கட்டப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக் கட்டுமானத்துக்கு எதிரான போராட்டம் பௌர்ணமி தினமான நேற்றுத் திங்கட்கிழமை முன்னெடுக்கப்பட்டது. போராட்டம் நடைபெறும் இடத்தில் ஏராளமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். இந்த விகாரை சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுதிறந்து வைக்கப்பட்டதிலிருந்து தொடர்ந்துவரும் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும், விகாரையை அகற்றக்கோரி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி, காணியின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோர் இணைந்து போராட்டம் நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடதக்கது. (எ-25,27,125)

# வெசாக்கை முன்னிட்டு கைதிகள் விடுவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

வெசாக் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் நாடு பூராகவும் 388 சிறைக்கைதிகள் நேற்றுத் திங்கட்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளே இவ்வாறு விடுதலைசெய்யப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 20 கைதிகள் இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளை யாழ். சிறைச்சாலை அத்தியட்சகர் டி.ஐ.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிறைச்சாலை அதிகாரிகள் கைலாகு கொடுத்து வழியனுப்பி வைத்தனர். (எ-25,23)

# எதிர்காலச்சந்ததியினருக்கு நீதியைப் போதிக்கும் நினைவுத்தூபி

## கனடா எம்.பி. யுவனிட்டா நாதன் தெரிவிப்பு

கனடாவின் பிரம்டன் நகரில் திறக்கப்பட்டுள்ள தமிழர் இனப்படுகொலை நினைவுத்தூபி எதிர்காலச் சந்ததி கற்றுக்கொள்வதற்கான சிந்திப்பதற்கான இடமாக மாறும். நாம் அநீதியை எதிர்கொள்ளும்போது ஒருபோதும் மௌனமாக இருக்கக்கூடாது என்பதற்கான உண்மையான நினைவூட்டலாக இது அமையும்.

இவ்வாறு கனடா நாடாளுமன்ற உறுப்பினர் யுவனிட்டா நாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

இந்த நினைவுச்சின்னம் நினைவைப் போற்றுவதற்கும், வெறுப்புக்கு எதிராக எழுந்து நின்று மனித உரிமைகளை நிலைநிறுத்துவதற்கான கூட்டுப் பொறுப்புத் தொடர்பாக சிந்திப்பதற்குமான ஒரு இடத்தை வழங்குகின்றது. புலம்பெயர்ந்த தமிழர்கள் பெருமளவில் வாழும் நாடு கனடா. அவர்களின் பங்களிப்பு கனடாவை எண்ணற்ற வழிகளில் வளப்படுத்தியுள்ளது. இந்த நினைவுத்தூபி தமிழ் சமூகத்தினர் மத்தியில் காணப்படும் வலிமை, மீள் எழுச்சித்தன்மை, நீதிக்கான தொடர்ச்சியான போராட்டத்தையும் பிரதிபலிக்கின்றது. இழக்கப்பட்ட உயிர்கள், துண்டாடப்பட்ட சமூகங்கள் பலர் அனுபவித்த வேதனைகளுக்கான அடையாளமாக திகழ்கின்றது-என்றார். (எ-இ)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி முற்றம் நேற்றுமுன்தினம் சிரமதானம் மூலம் தூய்மைப் படுத்தப்பட்டது. யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர்களும், பிரதேச மக்களும் இணைந்து இந்தச் சிரமதானப் பணிகளை மேற்கொண்டனர். (எ-66-125)

# வவுனியா சிறையிலிருந்து 7 கைதிகள் விடுவிப்பு

வவுனியா, மே 13

வெசாக் தினத்தை முன்னிட்டு வவுனியாச் சிறைச்சாலையில் இருந்து 7 கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிறு குற்றங்களோடு தொடர்புபட்ட 7 கைதிகளே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். வவுனியாச் சிறைச்சாலை அத்தியட்சகர் பி. டபிள்யூ. எச்.மதுசங்க தலைமையில் கைதிகள் விடுவிப்பு நிகழ்வு நடைபெற்றது. (எ-18)

# மரக்கறி விலைகள் உச்சம்

யாழ்ப்பாணம், மே 13

யாழ். குடாநாட்டில் சகல மரக்கறி வகைகளின் விலைகளும் உச்சத்தைத் தொட்டுள்ளன.

சித்திராப் பௌர்ணமி நாளாகிய நேற்று மக்கள் பிதிர்க் கடன்களை நிறைவேற்றும் முகமாக மரக்கறி உணவுகளைச் சமைப்பதில் ஆர்வம் காட்டினர். இதனால் மரக்கறிகளின் விலை சடுதியாக உயர்வடைந்து காணப்பட்டது.

திருநெல்வேலி சந்தை நிலைவரப்படி ஒரு கிலோ கத்தரிக்காய் 600 ரூபாவாகவும், பாகற்காய் 2 ஆயிரம் ரூபாவாகவும், தக்காளிப்பழம் ஆயிரத்து 200 ரூபாவாகவும், பயிற்றங்காய் 500 ரூபாவாகவும், மரவள்ளிக் கிழங்கு 400 ரூபாவாகவும், பூசணிக்காய் 300 ரூபாவாகவும், கரட் 900 ரூபாவாகவும், கீரை ஒரு பிடி 200 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டன.

அதேவேளை பிரதான சந்தைகளில் சகல மரக்கறிகளுக்கும் பற்றாக்குறை நிலவுவதோடு அவற்றின் விலையும் அதிகரித்துள்ளன என்று நுகர்வோர் கவலை தெரிவித்தனர். (எ-25,13)

# யாத்திரைக் காலம் நிறைவு

கொழும்பு, மே 13

2024 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி போயா தினத்தன்று ஆரம்பமான சிவனொளிபாதமலை யாத்திரை, மத அனுஷ்டானங்களுடன் உத்தியோக பூர்வமாக நிறைவடைதுள்ளது.

அடுத்த வருடம் சிவனொளி பாதமலை யாத்திரைக் காலம் ஆரம்பிக்கப்படும் வரை புனிதப்பெட்டி மற்றும் சிலை ஆகியன கல்பொத்தாவெல ரஜமஹா விகாரையிலுள்ள விகாரை அறையில் வைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஐந்து மாதங்களில் இலட்சக்கணக்கான யாத்திரிகர்கள் இந்த யாத்திரையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

# அமைச்சரவை மறுசீரமைப்பில் கவனம்செலுத்தும் அரசாங்கம்

கொழும்பு, மே 13

அமைச்சரவையை மறுசீரமைப்புச்செய்வது தொடர்பாக அரசாங்கத்தின் கவனம் திரும்பியுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பாக மூத்த அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தப்பட்டுள்ளது என்றும், பல்வேறு மக்கள் குழுக்கள் மற்றும் மாகாணங்களின் சிறப்பியல்புகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் அமைச்சர் பதவிகள் வழங்குவது தொடர்பில் இந்த ஆலோசனையில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமைச்சரவை மறுசீரமைப்பு நடைபெறும் திகதி தீர்மானிக்கப்படவில்லை என்றும், ஆயினும் அமைச்சரவை மறுசீரமைப்புத் தொடர்பாக தீவிர கவனம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

இந்த ஆலோசனை உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்து சில நாள்களின் பின்னர் நடைபெற்றுள்ளது என்றும் கூறப்படுகின்றது. (எ-இ)

## இலங்கை – இந்திய நட்புறவு சங்கத்தின் தலைவராக நளிந்த தெரிவு

கொழும்பு, மே 13

இலங்கை - இந்திய நாடாளுமன்ற நட்புறவுச் சங்கத்தின் தலைவராக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்த்தன அந்தச் சங்கத்தின் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## மின்சாரம் தாக்கி சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, மே 13

வெசாக் அலங்காரத்தில் ஈடுபட்ட 9 வயதுச் சிறுமி ஒருவர் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் களுத்துறை, மொரகஹஹேன பிரதேசத்தில் நடந்துள்ளது. மின் தாக்கத்துக்கு இலக்கான சிறுமி பாதுக்கை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக ஹோமாகம ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டபோதும் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை மொரகஹஹேன பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (எ-இ)

## இலங்கை வந்தது ஐடா ஸ்டெல்லா சொகுசுக் கப்பல்




ஐடா ஸ்டெல்லா சொகுசு பயணிகள் கப்பல் நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. மலேசியாவிலிருந்து 2 ஆயிரத்து 22 சுற்றுலாப்பயணிகள் மற்றும் 628 பணியாளர்களுடன் இந்தக் கப்பல் வந்துள்ளது. இந்தக் கப்பல் நேற்று முன்தினம் இரவு ஹம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்திருந்தது.

நேற்றுக் காலை கொழும்புத் துறைமுகத்துக்குச் சென்றுள்ளது. அவுஸ்திரேலியா, பிரேசில், கனடா மற்றும் பெல்ஜியம் உள்ளிட்ட 30 நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இந்தக் கப்பலில் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

## அரசியலமைப்புச்சபை செயலாளர் பதவிக்கு விளம்பரம் செய்ய முடிவு

கொழும்பு, மே 13

வெற்றிடமாக உள்ள அரசியலமைப்புச் சபையின் செயலாளர் பதவிக்குப் பொருத்தமானவரை நியமிக்க பத்திரிகைகளில் விளம்பரம் வெளியிட முடிவு செய்துள்ளதாக நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அரசியலமைப்புச் சபையின் செயலாளர் பதவியை வகித்த முன்னாள் நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் தம்மிக்க தசநாயக்க, தனிப்பட்ட காரணங்களுக்காக எதிர்வரும் முதலாம் திகதி பதவி விலகவுள்ளார். அவர் தனது பதவி விலகல் கடிதத்தை அரசியலமைப்புச் சபையில் சமர்ப்பித்திருந்த நிலையில், அது ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

தம்மிக்க தசநாயக்க 2023 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் பதவியிலிருந்து ஓய்வுபெற்றார். அதன் பின்னர் அதே ஆண்டில் அப்போதைய அரசாங்கத்தின் அரசியலமைப்புச் சபையின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். (எ-இ)



## வல்வெட்டித்துறையில் முள்ளிவாய்க்கால் கஞ்சி

யாழ்ப்பாணம், மே 13

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் நேற்று வல்வெட்டித்துறைப் பகுதியில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தில் தமிழர் தாயகம் எங்கும் முள்ளிவாய்க்கால் கஞ்சியை தயாரித்து வழங்கும் செயற்பாட்டில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஈடுபடவுள்ளனர்.

எதிர்வரும் புதன்கிழமை 14ஆம் திகதி யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கட்டடத்தொகுதியில் இரத்ததான நிகழ்வு ஒன்றையும் ஏற்பாடுசெய்துள்ளனர். முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள் அனுபவித்த துயரங்களை எடுத்துக்காட்டும் முகமாக பல்கலைக்கழக வளாகத்தில் முள்ளிவாய்க்கால் கண்காட்சி ஒன்றையும் பல்கலைக்கழக மாணவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். (எ-27)




ஆக்கிறதைவிடவும் அழிக்கிறதுதான் எல்லாருக்கும் சுகமான வேலை. ஒன்டை உருவாக்கிறது எவ்வளவு கஷ்டம் எண்டோ, அதுக்குப் பின்னால எத்தினை பேரின்ர உழைப்பு இருக்கெண்டோ, அதை அழிக்கிறதால என்னென்ன நட்டங்கள் வருமெண்டோ எங்கட ஆக்கள் யோசிக்கிறதில்லை. யாழ்ப்பாணத்தில ரயில் தண்டவாளத்துக்குப் பக்கத்தில நட்டு வளர்ந்திருந்த பெரிய புங்கை மரங்களை கொஞ்சம்கூட யோசிக்காமல் வெட்டி விழுத்தியிருக்கினம். அந்த 33 மரங்களும் இருந்தால் ரயில் போய்வர இடைஞ்சலாம். அதாலதான் ஆரோ சூழலில அக்கறை கொண்டவை ரண்டரை வருசமா பாடுபட்டு வளர்த்த அந்தப் புங்கை மரங்களை ரயில்வே திணைக்களக்காரர் வெட்டினவையாம். இத்தனைக்கும் அந்த மரக்கண்டுகள் தண்டவாளத்தில இருந்து பத்தடிக்குக்கிட்ட தள்ளித்தான் நட்டிருக்கினம். ஆனால் அது வளர்ந்தால் ரயில் போய்வர கரைச்சலா இருக்குமெண்டு இவையே கணக்குப்பார்த்து அந்தக் மரக்கண்டுகளை அழிச்சிருக்கினம்.

அந்த மரத்தை ஆரும் தங்கட தனிப்பட்ட தேவைக்காகவோ, லாபத்துக்காகவோ நடேலை. அந்த ஊரும், மண்ணும், சனங்களும் நல்லா இருக்கோணும், வெக்கை இல்லாமல் இருக்கோணும், அதால போய்வாறவை நிழலில நிண்டு ஆறுதல் எடுக்கோணும், மழை வீழ்ச்சி குறையக்கூடாது எண்ட பொது நோக்கங்களுக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டு அந்தமரக் கண்டுகளை தங்கட பிள்ளையள்மாதிரி பார்த்துப் பார்த்து வளர்த்தவை. அப்பிடி சமூக அக்கறையோட தாங்கள் வளர்த்த 33 மரக்கண்டுகளையும், ஒரே நாளில வெட்டிச் சாய்ச்சதைப் பார்த்தவைக்கு எப்பிடி இருந்திருக்கும்? அதைப்பற்றியெல்லாம் உந்த ரயில்வே டிப்பார்ட்மெண்ட்காரருக்கு என்ன கவலை? அவைக்கு ஏதும் வேலை செய்து மேலிடத்துக்கு ரிப்போர்ட் அனுப்போணும். அதுக்காகத்தான் மூளையைக் கழட்டி வைச்சுப்போட்டு இப்பிடியோரு கேவலங்கெட்ட வேலையைச் செய்திருக்கினம்.

இந்த மரக்கண்டுகள் ரண்டரை வருசத்துக்கு முதல் நட்டு, இப்பிடிச் சடைச்சு செழிச்சு வளரும்வரைக்கும் அதுகளால ரயிலுக்கு இடைஞ்சல் எண்டு ரயில்வே திணைக்களக்காரருக்குத் தெரியாதோ? அவையள் மரக்கண்டுகளை நடேக்கையே 'இது எங்கட டிப்பார்ட்மெண்டுக்குச் சொந்தமான இடம். இதில உந்தக் கண்டுகளை நடவேண்டாம்' எண்டு சொல்லியிருந்தால், அந்த மரக்கண்டுகளை வேற பொருத்தமான இடங்களில நட்டிருப்பினமெல்லோ. இப்பிடி அதுகளை ரண்டரை வருசமா வளர்த்துப்போட்டு பறிகுடுக்கிற நிலைமை வந்திருக்காதெல்லோ. அதைவிட சிங்களப் பக்கங்களில போனீங்கள் எண்டால் தண்டவாளத்தோட ஒட்டினபடியே மரங்கள் எல்லாம் இருக்கு. அந்த மரங்கள் பெரிசா, உயரமா வளர்ந்து தண்டவாளத்தின்ர கூரைமாதிரி வளர்ந்து, ரயிலுக்கும் நிழல் குடுக்குதுகள். அதைமாதிரி இந்த மரங்களையும் உயரமா வளர்த்து, மேல் பக்கம் சடைச்சு வளர விட்டிருந்தால் ரயிலுக்கும் பிரச்சினை இல்லை, மரத்துக்கும் பிரச்சினை இல்லை. ஆனால் இப்பிடியெல்லாம் மாற்றுவழி இருக்கெண்டு ரயில்வேத் திணைக்களக்காரர் யோசிக்கமாட்டினம். அவைக்குத் தெரிஞ்சதெல்லாம் வெட்டிறதும், அழிக்கிறதும்தான். பாதுகாப்பில்லாத ரயில்கடவை உள்ள இடங்களில பாதுகாப்புக்கடவை போடுங்கோ எண்டால் , அது காதிலையே விழாதமாதிரி நடிக்கிற ரயில்வே திணைக்களம், தண்டவாளத்துக்குப் பக்கத்தில தன்ரபாட்டில இருந்த மரங்களை வெட்டுறத்துக்கு மட்டும் விழுந்தடிச்சுக் கொண்டு போயிருக்கினமெண்டால் பாருங்கோவன்.

padsi@uthayan.com - பட்சி

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். வாழ்க்கைத்துணைவழி உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். தந்தைவழி உறவினர்களால் வீண் செலவுகள் ஏற்படும். முக்கியமான முடிவு ஒன்றை துணிச்சலுடன் எடுப்பீர்கள்.

**இடபம்:** அனுகூலமான நாள். சகோதரர்களால் சங்கடங்கள் ஏற்படக்கூடும். தந்தைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும். வாழ்க்கைத் துணைவழி உறவுகளால் சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். வாகனத்தில் செல்லும்போது கவனமாக இருக்கவும். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள்.

**கடகம்:** பொறுமையுடன் செயற்படவேண்டிய நாள். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. உங்களுடைய பணிகளில் வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூலமான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கிய முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம்தேவை. குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். அக்கம் பக்கத்தில் இருப்பவர்களால் சில சங்கடங்கள் ஏற்படும். பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் மனைவிக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கைத் துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும்.

**மகரம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருக்கும் பிணக்குகள் நீங்கி அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தில் உங்கள் முயற்சிகளுக்குத் தேவையான ஆதரவு கிடைப்பதில் பிரச்சினை எதுவும் இருக்காது.

**கும்பம்:** வியாபாரத்தைப் பொறுத்தவரை பிரச்சினை எதுவும் ஏற்படுவதற்கில்லை. தட்சிணாமூர்த்தியை வழிபடுவது நன்று. அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டாகும்

**மீனம்:** இன்று எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். பிள்ளைகளின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்று சோர்வு உண்டாகும்.

## புலம்பெயர்ந்தோருக்கான நுழைவிசைவுக் கொள்கையை கடுமையாக்கவுள்ள பிரிட்டன்

லண்டன், மே 13

புலம்பெயர்ந்தோருக்கான நுழைவிசைவுக் (விசா) கொள்கைகளைக் கடுமையாக்க பிரிட்டன் அரசாங்கம் முடிவுசெய்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

வேலைவாய்ப்பு நுழைவிசைவுகள் மூலம் பிரித்தானியாவுக்கு வரும் நபர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

பயிற்சிபெற்ற தொழிலாளர்களுக்கு நுழைவிசைவு வழங்கும்போது, அவர்களின் உயர் கல்வித் தகுதிகளுக்குக் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பயிற்சியற்ற தொழிலாளர்களை நாட்டுக்கு அழைத்துவரப்படுவதைக் கட்டுப்படுத்தவும் பிரிட்டன் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பயிற்சியற்ற தொழிலாளர்களை பணியமர்த்தும்போது, ஒரு குறிப்பிட்ட கால வரம்புக்கு உட்பட்டு அவர்களை பணியமர்த்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

வெளிநாட்டுத்தொழிலாளர்களைப் பயன்படுத்தும் தொழிற்றுறைகளை அடையாளம் கண்டு, அந்தத் தொழில்களுக்கு மட்டுமே அவர்களை பணியமர்த்தும் திட்டமொன்றையும் பிரிட்டன் அறிமுகப்படுத்தவுள்ளது என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## மதுபோதையில் சாரத்தியம் பயணிகள் பஸ் சாரதி கைது

கொழும்பு, மே 13

மதுபோதையில் பயணிகளை ஏற்றிச்சென்ற தனியார் பஸ் சாரதி ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பாணந்துறைப் போக்குவரத்துப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரணையிலிருந்து பாணந்துறை நோக்கி பல வாகனங்களை முந்திக்கொண்டு ஆபத்தான முறையில் பயணித்த பஸ்ஸை நிறுத்தி சோதனை செய்தபோது சாரதி மதுபோதையில் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த பஸ்ஸில் 40க்கும் மேற்பட்ட பயணிகள் பயணித்தனர் என்றும், அவர்களை வேறு பஸ்ஸில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (எ-இ)

## கெரண்டியெல்ல பஸ் விபத்து; உயிரிழப்பு 23ஆக உயர்வு

கொழும்பு, மே 13

இறம்பொடை, கெரண்டியெல்லப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவுவரை உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 21ஆக இருந்த நிலையில், மருத்துவமனையில் சிகிச்சைபெற்றுவந்த இருவர் உயிரிழந்துள்ளனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்களை மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டுசெல்ல இரண்டு ஹெலிகொப்டர்கள் தயார் நிலையில் உள்ளன என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (எ-இ)



## விபத்தில் சிக்கியோரை நேரில் சந்தித்த பிரதமர்

கொழும்பு, மே 13

இறம்பொடை, கெரண்டியெல்லப் பிரதேசத்தில் நடந்த பஸ் விபத்தில் காயமடைந்தவர்களை பிரதமர் ஹரிணி அமரசூரிய நேற்றுமுன்தினம் இரவு நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

பிரதமருடன் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவும் சென்றிருந்தார். காயமடைந்தவர்களை நலன் விசாரித்த பிரதமர், அவர்களுக்கு வழங்கப்படும் சிகிச்சைகள் தொடர்பில் மருத்துவர்களுடன் கலந்துரையாடியுள்ளார். (எ-இ)

## இரு பஸ்கள் விபத்து நால்வர் காயம்

காலியில் இருபஸ்கள்மோதிவிபத்துக்குள்ளானதில் நான்கு பேர் காயமடைந்துள்ளனர் என்று ஹபராதுவைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்து நேற்றுமுன்தினம் காலை நடந்துள்ளது. தனியார் பயணிகள் பஸ் ஒன்று, இலங்கைப் போக்குவரத்துசபை பஸ் ஒன்றின் பின்புறம் மோதியதில் விபத்து நடந்துள்ளது. விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## கெரண்டியெல்ல பஸ் விபத்து; 44 பேர் தொடர் சிகிச்சையில்

கொழும்பு, மே 13

இறம்பொடை, கெரண்டியெல்லப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடந்த பஸ் விபத்தில் காயமடைந்த 44 பேர் தொடர்ந்தும் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

கொத்மலைப் பிரதேச மருத்துவனை, நுவரெலியா மாவட்ட பொது மருத்துவமனை, பேராதனை, கம்பளை மற்றும் நாவலப்பிட்டி மருத்துவமனைகளில் இவர்கள் சிகிச்சைபெற்றுவருகின்றனர் என்றும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



# ஒரு விபத்தின் பின்னால்.!

நுவரெலியா–கண்டி பிரதான வீதியில் கொத்மலைக்கு மிக அண்மையில், அதிகாலையின் அமைதியை சிதைத்துக்கொண்டு நேற்றுமுன்தினம் நிகழ்ந்த கோர விபத்து, இலங்கையின் போக்குவரத்துப் பாதுகாப்பு முறைகள் குறித்த கடுமையான கேள்விகளை எழுப்பியுள்ளது. கதிர்காமத்தில் இருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துசபை பஸ் திடீரெனக் கட்டுப்பாட்டை இழந்து 100 அடி ஆழமான பள்ளத்தில் வீழ்ந்த சம்பவம், 23 பேரின் உயிரிழப்புக்கும் பலரது காயங்களுக்கும் வழி வகுத்தது. இந்த விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை என்பது வெறும் எண்களின் கதையல்ல – ஒவ்வொரு உயிரும் ஒரு வரலாறு, ஒவ்வொரு உயிரிழப்பும் அந்தந்தக் குடும்பங்களின் அழகிய உலகை உடைத்தெறிந்துவிட்டது. இந்த விபரீதத்தில் ஒரு தாய் தனது குழந்தையைத் தன் உடலால் மறைத்து காப்பாற்றியதாக வெளிவந்த செய்தியும் ஒளிப்படமும் , இந்தச் சோகத்தின் நடுவே நெகிழவைத்த சம்பவமாக பதிவாகியிருக்கிறது. தன் குழந்தையை மீட்புப்பணியாளர்களிடம் சேர்ப்பித்துவிட்டே அந்தத்தாய் உயிரைவிட்டுள்ளார்.

ஆரம்ப கட்ட விசாரணைகள் பஸ்ஸில் ஏற்பட்ட தொழில்நுட்பக்கோளாறே விபத்துக்கு அடிப்படைக் காரணம் என்று சுட்டிக்காட்டுகின்றன. இருப்பினும், இதுபோன்ற விபத்துகளுக்கு ஒற்றைக் காரணத்தை மட்டும் குறிப்பிடுவது சரியல்ல. பழுதடைந்த வாகனங்களின் இயக்கம், சாரதிகளின் போதிய பயிற்சி இல்லாமை, அபாயகரமான சாலைப்பகுதிகளில் போதிய முன்னெச்சரிக்கை வசதிகள் இல்லாமை போன்ற பல காரணிகள் பங்கு வகிக்கின்றன. குறிப்பாக விபத்து இடம்பெற்ற வீதியானது மலைச்சரிவோடு ஒட்டியதாகவும், குறுகலானதாகவும், அதிக வளைவுகளைக்கொண்டதாகவும் இருப்பதால் அங்கு விபத்துகள் நேர்வதற்கான சாத்தியங்கள் அதிகம். எனவே இந்த வீதியில் கரணம் தப்பினால் மரணம் என்பதைப் போன்று மிகுந்தஅவதானத்தோடுதான் வாகனங்களைச் செலுத்தவேண்டும். சிறிது கவனம் பிசகினாலும் பாரதூரமாகிவிடும். இந்த பஸ் விபத்திலும் அதுவே நடந்து, இத்தனை உயிர்களைக் கண்ணிமைக்கும் நேரத்தில் காவு கொண்டுவிட்டது. விபத்தில் பஸ்ஸின் சாரதியும் உயிரிழந்துவிட்டதால், உண்மையாகவே தொழில்நுட்பக்கோளாறுதான் காரணமா என்பதையும் உறுதியாகச் சொல்லமுடியாதுள்ளது. இலங்கையில் நடந்த ஒரு வீதிவிபத்தில் அதிகமானோரின் உயிரைக் காவுகொண்ட விபத்தாகவும் இந்தச் சம்பவம் பதிவாகியிருக்கிறது.

இந்த விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்குத் தலா ஒரு மில்லியன் ரூபா நிவாரணநிதி வழங்கப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது. ஆனால் இப்படி விபத்துகளில் உயிரிழந்தோருக்கான நஷ்டஈடு வழங்குவதென்பது, அரசாங்கம் இந்தச் சம்பவத்தில் தன்மீது விழவுள்ள பழியை மடைமாற்றும் முயற்சி மட்டுமே. மாறாக, இத்தகைய விபத்துகளை எதிர்காலத்தில் இடம்பெறாமல் தடுப்பதே உண்மையான தீர்வாக இருப்பதோடு, அதுவே பொறுப்பு வாய்ந்த அரசாங்கத்தின் கடமையுமாகும். இத்தகைய சோகங்கள் மீண்டும் நிகழாதிருக்க நாம் அனைவரும் நமது பங்கைச் செய்யவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். ஒவ்வொரு உயிரும் மதிப்புமிக்கது என்பதை உணர்ந்து, சாரதிகளும் மிக அவதானமாக வாகனங்களைச் செலுத்துவதும், போக்குவரத்து விதிகளை இறுக்கமாகக் கடைப்பிடிப்பதுமே இத்தகைய விபத்துகள் இனியும் நேராமலிருக்க வழிவகுக்கும்!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

## நாளொரு நல்வார்த்தை

நெருப்பு விறகைத் தின்பதுபோல
கபடமும், பொறாமையும்
நன்மைகளைத் தின்றுவிடும்.

– முகமது நபி –






## நாடாளுமன்ற அதிகாரிகளின் எரிபொருள் ஒதுக்கீடு குறைப்பு

**நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட நாடாளுமன்ற நிர்வாக அதிகாரிகளுக்கான எரிபொருள் ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டு விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.**

இதுவரை செயலாளர் நாயகத்திற்கு வரம்பற்ற எரிபொருள் வழங்கப்பட்ட நிலையில் இனிவரும் காலங்களில் மாதத்துக்கு 220 லீற்றர் எரிபொருள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதிச் செயலாளர் பெறும் எரிபொருளின் அளவும் மாதத்துக்கு 165 லீற்றராகக் குறைக்கப்பட்டுள்ளது.

உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் துறைத்தலைவர்கள் பெறும் எரிபொருளின் அளவு மாதத்துக்கு 135 லீற்றராகவும், செயலாளர் நாயகத்தின் ஒருங்கிணைப்புச் செயலாளர் பெறும் எரிபொருளின் அளவு மாதத்துக்கு 115 லீற்றராகவும் குறைக்கப்பட்டுள்ளது. கடந்த 7 ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த சுற்றறிக்கையின்படி, எரிபொருள் கட்டுப்பாடுகள் எதிர்வரும் 2 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. (ஏ-இ)

## 9,000 தன்சல்கள்

வெசாக் போயா தினத்தை முன்னிட்டு நாடு முழுவதும் நேற்றுமுன்தினம்வரை 9 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தன்சல்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தன்சல்களைப் பரிசோதிப்பதற்காக 2 ஆயிரத்து 500 பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும், உணவு தயாரிக்கும் பகுதிகள், தன்சல் நடைபெறும் இடங்கள், மூலப்பொருள்கள் மற்றும் நீரை தொடர்ந்து பரிசோதிக்கவேண்டும் என்று பரிசோதகர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-இ)

## போதைப் பொருள்களுடன் 360 பேர் கைது

கொழும்பு, மே 13

நாடளாவிய ரீதியில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது போதைப்பொருள்களை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 360 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. ஹெரோயின்போதைப் பொருளுடன் 114 பேரும், ஐஸ் போதைப்பொருளுடன் 141பேரும், கஞ்சா போதைப் பொருளுடன் 100 பேரும், கஞ்சா செடிகளுடன் 5 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஏ-25)

## வெசாக் காலத்தில் சிறப்பு நடவடிக்கை

கொழும்பு, மே 13

வெசாக் பண்டிகைக் காலத்தில் நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் சோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகாரசபை அறிவித்துள்ளது. வெசாக்கின்போது பொதுவாகப் பயன்படுத்தப்படும் அடபிரிகர, மதப் பிரசாதங்கள், தூபக் குச்சிகள், அலங்காரப்பொருள்கள் மற்றும் மின்சாரப் பல்புகள் போன்ற விற்பனையாளர்கள் மற்றும் பொருள்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ஏ-இ)

## துறைமுகச் செயற்பாடுகளை வினைத்திறனாக்கக் கூட்டம்!

கொழும்பு, மே 13

இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள பதற்றமான நிலைமையால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சூழ்நிலைகள் தொடர்பாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுள்ளது. இந்தப் பதற்ற நிலைமை காரணமாக இலங்கைத் துறைமுகங்களுக்கு மேலதிகக் கப்பல்கள் வருவதற்கான கோரிக்கைகள் கிடைத்துள்ளன. அவற்றை வினைத்திறனுடன் கையாள்வதற்கும் தற்போதைய செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்காமல் செயற்படுவதை உறுதிசெய்வதற்கும் காணப்படும் இயலுமைகள் மற்றும் முன்மொழிவுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளன.

உலகளாவிய அரசியல் சூழ்நிலையை வெற்றிகரமாக எதிர்கொண்டு அதை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி துறைமுகம் மற்றும் விமானநிலைய செயற்பாடுகளை திறம்பட மேற்கொள்ளவேண்டும் என்று அமைச்சர் இந்தக் கலந்துரையாடலில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஏ-இ)

## Vacancy-Quantity surveyor and technical officer

1. Quantity surveyor (QS)
   - A bachelor's degree in quantity surveying or a related field
   - Minimum 2 years' experience
2. Assistant Quantity surveyor (AQS)
   - NVQ-4 qualification in a relevant field
3. Technical Officer (Civil)
   - Diploma in civil engineering/ NCT (Civil) or equivalent qualification
   - Minimum 2 years' experience
4. Technical Assistant
   - Relevant working experience

Send your CV to shaganaconstruction@hotmail.com or
WhatsApp: 077 724 5399

(CS 3152) D"



## ஆசிரியை தேவை

Grade 10,11 english medium science, maths, tamil, business studies
Grade 3 - tamil, maths - ஆசிரியை/பல்கலை மாணவி வீடு வந்து கற்பிப்பதற்கு தேவை

தொடர்பு:- 074 380 2161


# இராணுவ முகாமில் பணியாற்றியவர் பலி!

பலாலி இராணுவ முகாமில் பணிபுரிந்து வந்த இராணுவ சிவில் விவசாய உத்தியோகத்தர் நேற்று திடீரென உயிரிழந்துள்ளார்.

விதுர சஞ்சீவ மதுரட்ட (வயது 51) என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவருக்கு நேற்றுக் காலை திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டுள்ளது. இதையடுத்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், அவர் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைதிடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம–27)


## வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | Rs. 3000.00 - 3500.00 |
| மேசன் உதவியாளர் | Rs. 2500.00 - 2700.00 |
| வெல்டர் | Rs. 3000.00 - 3500.00 |
| தச்சு வேலை | Rs. 3000.00 - 3500.00 |
| பெயின்ரர் | Rs. 2500.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)
தொடர்பு : 0777245399 (காலை 8.00 - மாலை 6.00 வரை)
யாழ்ப்பாணம்

(CS 3151) (A) D"


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு



தோற்றம் 21 . 06 . 1953

மறைவு 24 . 04 . 2024

குரோதி வருடம் 24.04.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் நடராஜா சக்திவேல்

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வானது இன்று (13.05.2025) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அச்சுவேலி வடக்கில் அமைந்துள்ள "அன்னாரின் இல்லத்தில்" நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

விஸ்வகுல வீதி,
அச்சுவேலி வடக்கு. அச்சுவேலி.

குடும்பத்தினர்
077 516 3318, 077 057 1560
0044 747 679 6030

(CS/29636) J-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 01 . 02 . 1937

மறைவு 23 . 05 . 2024

### இராசரத்தினம் ஞானசக்தி

(திதி - தேய்பிறை பிரதமை (13.05.2025) செவ்வாய்க்கிழமை)

கண் மூடி திறக்க முன்
ஒரு வருடம் வந்துவிட்டது - அம்மா
இந்த வருடம் மாசி மாதம் வந்தவுடன்
உன் நினைவு எங்களை வாட்டுகின்றது - அம்மா
எங்கள் கண்முன்னே வாழ்ந்த வாழ்க்கை
கனவாகி போனாலும்
எம் முன்னே உங்கள் முகம்
எந்த நாளும் உயிர் வாழும் அம்மா...

ஓம் சாந்தி.

இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய், வடக்கு

குடும்பத்தினர்.

(CS 58177) E-1

## மரண அறிவித்தல்



தோற்றம் . 07 . 05 . 1955

மறைவு . 12 . 05 . 2025

### திருமதி திருமகள் மோகனதாஸ்
(திருமகள் ரீச்சர்) (வட்டுக்கோட்டை அக்கா)

வட்டுக்கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருமகள் மோகனதாஸ் அவர்கள் **(12.05.2025)** இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் - மனோன்மணி தம்பதியினரின் மூத்த மகளும் காலஞ்சென்ற மோகனதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நாராயணசுவாமி - மனோன்மணி தம்பதியினரின் இளைய மருமகளும், திருக்குமார், காலஞ்சென்ற கலைமகள், திருக்கேதீஸ்வரன் (கேசவன்) (ஆசிரியர் மு/ அம்பகாமம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை) ஆகியோரின் அன்புச்சகோதரியும், மனோரஞ்சிதமலர், சுபாஜினி, காலஞ்சென்றவர்களான மகேந்திரன், மனோகரிதேவி, சிறிதரன், மனோமகமணி, மனோரஞ்சிதமலர் மற்றும் மனோகரன் (சட்டத்தரணி), ரட்ணவதனி (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மைத்துனியும் கலாவினன் (வட்டு இந்துக்கல்லூரி), கவிநன் (யாழ்ப்பாணக்கல்லூரி), ஆதிநன் (யாழ்ப்பாணக்கல்லூரி), ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் செவ்வாய்கிழமை இன்று (13.05.2025) நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வட்டுக்கிழக்கு
வட்டுக்கோட்டை

தகவல்:
குடும்பத்தினர்

## 25ஆம் ஆண்டு நினைவு



தோற்றம் 30 . 01 . 1958

மறைவு 13 . 05 . 2000

### தியாகராஜா பிறேமராஜன்
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்)

நீங்கள் மறைந்தது
இந்த உலகத்தை விட்டுத்தான்
எங்கள் உள்ளத்தை விட்டு அல்ல

வற்றாப்பளை,
முள்ளியவளை

என்றும் நீங்காத நினைவுகளுடன்
மகன் - பி.கௌசிகன்

(CS/58178) J-1

# மக்கள் கொடுத்த ஆணைக்கேற்ப ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும்!

## சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 13**

**மக்கள் கொடுத்த ஆணைக்கேற்ப இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகிய கட்சியினர் கூட்டாகப் பேசி ஒன்றுபட்டுச் செயற்படவேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் ஊடகசந்திப்பொன்றை முன்னெடுத்து அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர் நிலத்தை தமிழரே ஆட்சி செய்யவேண்டும் என்ற தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் ஆட்சியை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து நிர்வகிக்கவேண்டும் என்ற தீர்ப்பையே தமிழ் மக்கள் உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலின் மூலம் வழங்கியுள்ளனர்.

தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களை எடுத்துக்கொண்டாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கவில்லை.

இதனால் தமிழ் மக்களின் நலன்கருதி ஏனைய தரப்பினருடன் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட தமிழ்த் தரப்புகள் தயாராகவேண்டும்.

இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது. தவறுகள் இனிமேல் இழைக்கப்படக்கூடாது. மக்கள் ஆசனங்களை அனைவருக்கும் பகிர்ந்தளித்துள்ளனர்.

பேச்சுகள் சரியாக நடைபெறுமாக இருந்தால் ஓர் அணியில் நின்று ஆட்சி அதிகாரங்களை பகிர்ந்துகொள்வதில் சிக்கல் இருக்காது, சிறப்பாக அமையும் - என்றார். (ச-27,125)

# பகட்டான அரசியலுக்கு முற்றுப்புள்ளியிடுவோம்

## எதிர்க்கட்சிகள் தெரிவிப்பு



கொழும்பு, மே 13

திசைகாட்டியின் பொய் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன. 266 உள்ளூராட்சிமன்றங்களில் அரசாங்கம் வெற்றி பெற்றிருந்தாலும் 116 மன்றங்களில் மாத்திரமே ஆட்சியமைக்கக்கூடியளவு பெரும்பான்மை அரசாங்கத்துக்குக் காணப்படுகிறது என ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் சமன் ரத்னபிரிய தெரிவித்துள்ளார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறிகொத்தாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பொதுத்தேர்தலைவிட உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் அரசாங்கம் 34 சதவீதம் குறைவான வாக்குகளைப் பெற்றுள்ளது. 266 உள்ளூராட்சிமன்றங்களில் தாம் வெற்றிபெற்றுள்ளதாக அரசாங்கம் கூறுகின்றது. ஆனால் அனைத்திலும் இவர்களால் சபைகளை நிறுவமுடியாது. 116 சபைகளில் மாத்திரமே அரசாங்கத்தால் ஆட்சியமைக்கமுடியும். மறுபுறம் ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, சர்வஜன அதிகாரம் உள்ளிட்ட கட்சிகள் கடந்த காலங்களைவிட அதிக வாக்குகளைப் பெற்றுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சி இறுதியாக யானைச் சின்னத்தில் களமிறங்கியபோது பெற்றுக்கொண்ட வாக்குகளைவிட இருமடங்கு அதிக வாக்குகளை இம்முறை பெற்றுள்ளது. திசைகாட்டியின் பொய் அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காக சகல எதிர்க்கட்சிகளும் ஒன்றிணையவுள்ளன -என்றார். (ச-இ)

# வீடு கையளிப்பு



காரைநகர் தங்கோடையைச் சேர்ந்த அமரர்களான கனகலிங்கம், பத்மாவதி ஆகியோரின் நினைவாக அவர்களின் குடும்பத்தினரின் நிதிப்பங்களிப்பில் சந்நிதியான் ஆச்சிரமத்தினரால் 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியில் புதிதாக அமைக்கப்பட்ட வீடொன்று வவுனியாப் பெரியகுளம் கிராமத்தைச் சேர்ந்த மாற்றுவலுவுடைய பிள்ளையை அங்கத்தவராகக்கொண்ட குடும்பமொன்றுக்கு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கையளிக்கப்பட்டது. நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய வீட்டைத் திறந்து வைத்ததுடன் பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்துவைத்தார். (ச-41-66-27)

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் நால்வர் கைது

கொழும்பு, மே 13

வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் சந்தேகநபர்கள் நால்வர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அண்மையில் கைப்பற்றப்பட்ட அதிகளவான சிகரெட் தொகை இதுவாகும் என சுங்கத் திணைக்கள் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

டுபாயிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகைதந்த நான்கு இளைஞர்களே இவ்வாறு சுங்கத் திணைக்கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைப்பற்றப்பட்ட சிகரெட்டுகளின் மொத்தப் பெறுமதி 600 இலட்சம் ரூபா எனத் தெரியவருகிறது. (ச-இ)

## இந்தியா – பாகிஸ்தான் மோதல்

# வெற்றிலை ஏற்றுமதி இலங்கையில் பாதிப்பு!

கொழும்பு, மே 13

இந்தியா - பாகிஸ்தானுக்கு இடையிலான பதற்றமான சூழ்நிலை காரணமாக வெற்றிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெற்றிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானசேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் கராச்சிக்கான வெற்றிலை ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு அதிகளவான வெற்றிலை ஏற்றுமதி இடம்பெறுகிறது. வாரத்தில் இரு நாள்களுக்கு விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்கள் வெற்றிலையைக் கொள்வனவுசெய்கின்றனர். எனினும், விமான சேவை நிறுத்தப்பட்டமையினால் வெற்றிலைகள் விமானநிலையத்தில் தேங்கியுள்ளன. இதனால் உள்நாட்டுச் சந்தையில் எதிர்காலத்தில் அதிகளவான வெற்றிலைகள் வரும் நிலையில் அவற்றின் விலை குறைவடையும் எனவும் அவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-இ)



# இரதோற்சவம்

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலய இரதோற்சவமானது நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது. நேற்றுமுன்தினம் காலை 5 மணியளவில் கிரியைகள் ஆரம்பமாகித் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜை நடைபெற்றது. பின்னர் விநாயகப்பெருமான் உள்வீதியில் வலம்வந்து, சித்திரத்தேரில் வீற்றிருந்து வெளிவீதியுலா வலம்வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். (ச-41-27)




# உள்நாட்டுப் போரின்போதும் இலங்கை வீழவில்லை

## ரணில் இந்தியாவில் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

இலங்கையின் உள்நாட்டுப் போரின்போதும் தேசிய பொருளாதாரம் வளர்ச்சிப் பாதையை நோக்கியே சென்றது. எனவே மோதல்கள் ஒரு நாட்டின் வளர்ச்சியைப் பாதித்துவிடக்கூடாது. காஷ்மீரில் பயங்கரவாதம் முடிவுக்கு வரவேண்டும்.

இவ்வாறு இரண்டு நாள்கள் விஜயம் மேற்கொண்டு இந்தியா சென்றுள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 'த இந்து' செய்தித்தாளின் ஐந்தாவது பதிப்புத் தொடர்பாக நடைபெறும் சிறப்பு நிகழ்வில் பங்கேற்றபோது தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இந்தியப் பெருங்கடலைச் சுற்றியுள்ள மிகப் பெரிய மக்கள் தொகை நாடாக இந்தியா உள்ளது. இது ஒரு முக்கோண உலகம், அதில் நாம் எமது பகுதியைக் கையாள்கிறோம்.

இந்தியா, பாகிஸ்தான் ஆகியவற்றுக்கு இடையில் நெருக்கடியான நிலைமை தோன்றியுள்ளது. இத்தகைய மோதல்கள் ஊடாக ஏற்படக்கூடிய பொருளாதார நெருக்கடி மற்றும் தொழிலின்மையை கருத்திற்கொள்ளவில்லை என்றால் பங்களாதேஷ்க்கு ஏற்பட்ட நிலைமை பாகிஸ்தானுக்கும் ஏற்படலாம்.

மறுபுறம் பாகிஸ்தானால் குண்டுவீசப்பட வாய்ப்புள்ள இந்தியாவில் முதலீடு செய்யவேண்டுமா என்று அமெரிக்க முதலீட்டாளர்கள் சிந்தித்து வருகின்றனர் - என்றார். (ச-இ)





நீர்வேலிக் கந்தசுவாமி ஆலய வருடாந்தத் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் தீர்த்தத் திருவிழா நேற்று திங்கட்கிழமையும் இடம்பெற்றன. (ச-41-17)



வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவமானது எதிர்வரும் 17ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. அதை முன்னிட்டு நாவாந்துறை கன்னாபுரம் இளைஞர்களால் ஆலய வளாகத்தில் சிரமதானப் பணி நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை முன்னெடுக்கப்பட்டது. (எ-41-27)





கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில் மஹோற்சவப் பெருவிழாவின் வேட்டைத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. (எ-159)



நாவாந்துறை கலைவாணி சனசமுக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு பொன்விழாவை முன்னிட்டு, விளையாட்டுப்போட்டி நிகழ்வுகள் நேற்றுத் திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றன. நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை சைக்கிள் ஓட்டப்போட்டியும், நேற்றுத் திங்கட்கிழமை காலை மரதன் ஓட்டப் போட்டியும் நடைபெற்றதைத் தொடர்ந்து சிறுவர்கள் மற்றும் பெரியோர்களுக்கான மைதான விளையாட்டுகள் நடைபெற்றன. (எ-25,27)





"விதையனைத்தும் விருட்சமே" செயற்றிட்டத்தின்கீழ் மாங்குளம் சமூக நல்லிணக்கத்துக்கான டெல்வன் உதவி (டாஸ்) நிறுவனத்தின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் மாங்குளம் ஒலுமடுச் சந்திக்கு அருகாமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. சுமார் 75 கொடையாளர்கள் கலந்து குருதிவழங்கினர். இச் செயற்திட்டத்தின் மூலம் இதுவரை காலமும் 2 ஆயிரத்து 227 குருதிக் கொடையாளர்கள் குருதிவழங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-25,27)



மன்னார் மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள அம்பாரவேல் பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தின் முதலாவது தேர்த்திருவிழா மிகவும் பக்திபூர்வமாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதுவரை காலமும் அலங்கார உற்சவமாக நடைபெற்றுவந்த திருவிழா இம்முறை கொடியேற்றத்துடன் மஹோற்சவத் திருவிழாவாக நடைபெற்றது. (எ-41-213)



புதுக்குடியிருப்பு, ஆத்துப்பிலவில் புதிதாக அறநெறிப்பாடசாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கலந்துகொண்டார். (எ-216)

# பெரும்பான்மை இல்லையென்பதை கருத்திற்கொண்டு செயற்படுங்கள்!

## தமிழரசுக் கட்சிக்கு சிறீகாந்தா அறிவுரை



யாழ்ப்பாணம், மே 13

**இலங்கைத் தமிழரசுக் கட்சி தாம் முன்னிலை பெற்றதாகக் கூறினாலும், அவர்கள் அறுதிப் பெரும்பான்மை பெறவில்லை. அதைக் கருத்தில் கொண்டு அவர்கள் நகர்வுகளை முன்னெடுக்க வேண்டும் என்று தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் ந.சிறீகாந்தா தெரிவித்துள்ளார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த் தேசியப் பேரவை உறுப்பினர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது தமிழ்த் தேசிய பேரவையினர் பணபலம் இன்றி இலட்சியத்தை நம்பி குறிக்கோளை நம்பி களத்திலே அல்லும் பகலும் போராடினார்கள். எமது அரசியல் வெற்றி தலைமை மாற்றத்தைக் கொண்டு வரும்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றிருந்தாலும் அவர்களுக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லை. பல சபைகளில் நாம் தீர்மானிப்பவர்களாக உள்ளோம். சில சபைகளில் ஜனநாயகத் தமிழ்த்தேசியக் கூட்டணி உள்ளது. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குறிப்பிட்டதைப் போன்று கொள்கையுடன் பயணிக்க வேண்டும்-என்றார். (எ-125)

# அரசாங்கத்தோடு போராடியே ஆசனங்களைப் பெற்றோம்

## சிவாஜிலிங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த் தேசியப்பேரவையைத் தோற்கடிக்க தேசிய மக்கள் சக்தி வல்வெட்டித்துறையில் பகீரதப் பிரயத்தனம் செய்தது. நாங்கள் போராடியே ஆசனங்களைக் கைப்பற்றினோம் என்று எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தமிழ்த்தேசியப் பேரவையின் உறுப்பினர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

சிவாஜிலிங்கம் ஒரு முள். அவர் களைந்தெறியப்பட வேண்டும் என்று ஜனாதிபதிகூடக் கூறியிருந்தார். தேர்தலுக்கு முதல்நாள்கூட பொலிஸ் நிலையம் அழைத்து எம்மை விசாரித்தார்கள்.

நாங்கள் போராடியே ஆசனங்களைக் கைப்பற்றினோம். எம்மைப் பொறுத்தவரையில் ஜனநாயகப் போராட்டத்தில் நாங்கள் தொடர்ந்து ஈடுபடுவோம். மாவீரர்களுக்கும், அப்பாவி மக்களுக்கும் ஏற்பட்ட அநியாயங்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுப்போம்-என்றார். (எ-125)



# தமிழ்த்தேசியப் பேரவை உறுப்பினர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், மே 13

தமிழ்த்தேசியப் பேரவை உறுப்பினர்களுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இடையே நேற்றுமுன்தினம் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மண்டபம் ஒன்றில் தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா, செயலாளர் சிவாஜிலிங்கம் , நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவன், தமிழ்த்தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன், ஜனநாயக தமிழரசுக் கட்சியின் உப செயலாளர் நாவலன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்கள், அரசியல் இயக்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-125)



# தமிழ் மக்கள் கூட்டணி வவுனியாவில் கூட்டம்

வவுனியா, மே 13

தேர்தலுக்குப் பின்னரான செயற்பாடுகள் தொடர்பாக தமிழ் மக்கள் கூட்டணி வவுனியாவில் நேற்றுமுன்தினம் கூடி ஆராய்ந்துள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் வவுனியாப் பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் வேட்பாளர்களுடன் சட்டத்தரணி வி.மணிவண்ணன் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

பிரதேசசபைக்கு உறுப்பினர்களை நியமிப்பது, தவிசாளர் தெரிவில் யாருக்கு ஆதரவளிப்பது, கட்சியை வவுனியா மாவட்டத்தில் விரிவாக்கம் செய்வது, எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல் எனப் பலவிடயங்கள் கலந்துரையாடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (எ-125)

# கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைக்க கடும் போட்டி

கொழும்பு, மே 13

கொழும்பு மாநகரசபையில் ஆட்சியமைப்பதற்கு அவசியமான 59 உறுப்பினர்கள் அல்லது அதற்கு அதிகமான உறுப்பினர்களை எந்த அரசியற்கட்சிகளும் தனித்துப்பெற்றுக் கொள்ளாததால் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதில் அரசியற்கட்சிகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன.

நடைபெற்று முடிந்த 339 உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளுக்கான தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்தி 265 உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகளைக் கைப்பற்றியது. அவற்றில் 116 உள்ளூராட்சி மன்ற அதிகாரசபைகளில் மாத்திரம் தான் தனித்து ஆட்சியமைக்கும் பெரும்பான்மை தேசியமக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்றது.

இந்த நிலையில் உள்ளூராட்சிமன்றங்களின் பிரதான கேந்திர மையமாகக் கருதப்படும் கொழும்பு மாநகர சபையில் ஆட்சியமைப்பதும் பெரும் நெருக்கடியாக மாறியுள்ளது.

ஆளும் கட்சியான தேசிய மக்கள் சக்தி கொழும்பு மாநகரசபையில் 48 உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டுள்ள நிலையில் ஏனைய அரசியற் கட்சிகள் உட்பட சுயேச்சைக் குழுக்கள் 69 உறுப்பினர்களைப் பெற்றுள்ளன.

தனிக்கட்சி என்ற அடிப்படையில் அதிகளவான ஆசனங்களைப் பெற்றுக் கொண்டுள்ளோம். ஆகவே நாங்களே ஆட்சியமைப்போம் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஆயினும் கொழும்பு மாநகரசபை மேயர் பதவிக்கான போட்டியில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இறங்கியுள்ளது. (எ-இ)

# பேருந்தை இடைமறித்துத் தாக்குதல் இளைஞர் ஒருவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், மே 13
யாழ்ப்பாணம் காரைநகர் வழித்தடச் சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்து ஒன்றை வழிமறித்து இளைஞர் ஒருவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பேருந்து தொல்புரம் பாணாவெட்டி பகுதியில் சென்று கொண்டிருந்தபோதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. தாக்குதலுக்கு உள்ளான இளைஞர் வாய்பேச முடியாதவர் என்றும், அவருக்கும் இன்னொரு பெண்ணுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரியவருகின்றது. அத்துடன் பேருந்தில் பயணித்த பிறிதொரு பெண் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இந்தப் பேருந்து மூளாய் மருத்துவமனையுடன் இடைநிறுத்தப்பட்ட நிலையில், மாற்றுப் பேருந்து மூலம் பயணிகள் பயணத்தைத் தொடர்ந்தனர்.

(ம-125)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரத்தை முன்னிட்டு நேற்று நல்லூரிலும், முலவைச் சந்தியிலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. (எ-66)

# திறைசேரி உண்டியல் ஏல விற்பனை

கொழும்பு, மே 13
ஒரு இலட்சத்து 73 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்கள், எதிர்வரும் 14 ஆம் திகதி ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

91 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 30 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 70 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 364 நாள்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 73 ஆயிரம் மில்லியன் ரூபா பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனையினூடாக வழங்கப்படவுள்ளன என்று மத்திய வங்கி அறிவித்துள்ளது.

(எ-இ)

# மணிவிழா வாழ்த்து



எமது பாடசாலையில் ஆசிரியர் சேவை (தரம் I) கடமையாற்றி இன்று 60 ஆவது அகவை காணும்

## அருட்சகோதரி மேரி வினோதா A.C

அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
அவரது ஓய்வுக்காலம்
சிறக்க வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம்**

| | |
|---|---|
| மட்/கறுவாக்கேணி விக்னேஸ்வரா வித்தியாலயம் | - (01.01.1997 - 14.02.2001) |
| யா/புனித திரேசா பெண்கள் கல்லூரி | - (15.02.2001 - 25.10.2004) |
| தி/புனித அந்தோனியர் ம.வித்தியாலயம் | - (26.10.2004 - 30.05.2010) |
| யா/வதிரி திரு இருதயக் கல்லூரி | -(31.05.2010 - 17.02.2013) |
| யா/குளமன்கால் றோ.க.த.பாடசாலை | - (18.02.2013 - 26.01.2016) |
| யா/புனித திரேசா பெண்கள் கல்லூரி | - (27.01.2016 - 31.12.2018) |
| யா/வதிரி திரு இருதயக் கல்லூரி | - (01.01.2019 - 23.02.2021) |
| மன்/அடம்பன் மத்திய மகாவித்தியாலயம் | - (24.02.2021 - 13.05.2025) |

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
மன்/அடம்பன் மத்திய மகாவித்தியாலயம்.



# பேருந்து தடம்புரண்டதில் 20 பயணிகளுக்குக் காயம்

யாழ்ப்பாணம், மே 13
வெசாக் யாத்திரிகர்கள் பயணித்த பேருந்து ஒன்று, வீதியை விட்டுவிலகி நேற்று இரவு தடம்புரண்டு விபத்துக்கு உள்ளானதில் 20 பேர் காயமடைந்துள்ளனர். கண்டி அல்தெனிய பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றது. காயமடைந்த பயணிகள் அனைவரும் பேராதனை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ம)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம்
21 . 09 . 1950

மறைவு
11 . 05 . 2025

## கலாபூஷணம் சிற்றம்பலம் சிவானந்தராஜா

ஈழத்தின் புகழ்பூத்த இசைவிற்பன்னர், எழுத்தாளர், கலாபூஷணம் சிற்றம்பலம் சிவானந்தராஜா அவர்கள் **11.05.2025** ஞாயிறு அன்று இறைபதம் அடைந்தார். சிறந்த எழுத்தாளர், இலங்கை வானொலியில் இசை நிகழ்ச்சிகளிலும் நாடகங்களிலும் பாடகராக ஜொலித்தவர். தாயகம் இதழின் நீண்டகால வாசகர். சுழிபுரம் வடக்கு யோகி கார்த்திகேசு அறநெறிப் பாடசாலையில் செயலாளராகவும் அறநெறி ஆசிரியராகவும் கடமை புரிந்தவர். மதுரை தமிழாராட்சி மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற உலக தமிழ் இசை மாநாட்டில் ஆய்வு கட்டுரை சமர்ப்பித்து கலந்துகொண்டவர். கவிதை நூல்கள் உட்பட பல நூல்களின் ஆசிரியர். அவரது இழப்பு எமக்கும் எமது ஊருக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஓம் சாந்தி !!! சாந்தி !!! சாந்தி !!!

**செட்டியகுறிச்சி உறவினர்கள்**

(CS 3154) D"

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
30 . 03 . 1952

மறைவு
24 . 04 . 2024

## இலட்சுமிநாதன் புஸ்பராணி

பாட்டின் பொருளறிந்து பரமன் பதம் பணிந்து
நாட்டில் நாம் சிறக்க நல்வழியும் காட்டி நின்று
வீட்டில் இணைந்திருந்து விதம் விதமாய் கனவுகண்டு
கூட்டில் குருவிகளாய் குலவியிருந்த வாழ்வு
நேற்றுப் போல் இருந்து நெஞ்சை
வாட்டி வதைக்குதம்மா !

ஆருயிர் கணவனுக்கு கரம் நீட்டி
அன்புசார் குழந்தைகளுக்கு அறிவூட்டி
பற்றுமிக்க சகோதரியாய் நேச
உறவினராய் நிகரில்லா சேவகியாய்
தங்கி இருந்தவர்கள் தவிக்கின்றோம் உமையிழந்து
உங்கள் கபடமற்ற புன் சிரிப்பு எல்லோரக்கும் பிடிக்கும் அம்மா
அதனால் தான் இது கடவுளுக்கு பிடித்ததுவோ !
உம்மை அவசரமாக அழைத்து விட்டான்

ஆண்டு ஒன்றாகி ஆனதுவோ அம்மாவே !
ஆறாது எம் துயரம் அழுதாலும் தீராது ...
இறைவன் பாதமதில்
அமைதிபெற வேண்டுகின்றோம்...

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் வீதி,
சங்கத்தானை

குடும்பத்தினர்

(CR 3155) D"

## போதை....

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் கடந்த சில வாரங்களாக அளவுக்கு அதிகமான போதைப்பொருள் பாவனையால் சிலர் உயிரிழுந்துள்ளனர். அதீத போதைப்பொருளால் ஏற்படும் மரணங்கள் நீண்ட காலமாக இல்லாமலிருந்த நிலையில், அண்மைக்காலமாக மீண்டும் போதைப்பொருளால் ஏற்படும் மரணங்கள் அதிகரித்துள்ளமை வேதனையான விடயமாகும்.

கடந்த ஒரு வாரத்துக்குள் மட்டும் நான்கு பேர் இவ்வாறு உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் அனைவரும் 35 வயதுக்கு உட்பட்டவர்கள். அத்துடன், ஒவ்வொரு நாளும் போதைப்பொருள் பாவனையால் குறைந்தது மூவராவது பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வருகின்றனர். அவர்களில் பலர் புனர்வாழ்வுக்காக அனுப்பப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் மீண்டும் போதைப்பொருள்களின் பாவனை அதிகரிக்க ஆரம்பித்துள்ளது - என்றனர். (அ-ம-26)

## பொலிஸ்...

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் விசேட படையணியில் பணியாற்றிய, பொலனறுவைப் பகுதியைச் சேர்ந்த அந்தப் பொலிஸ் அலுவலர், சக பொலிஸ் அலுவலரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாகத் தெரிவித்து 14 லட்சத்து 70 ஆயிரம் ரூபாவை மோசடி செய்துள்ளார். 2022ஆம் ஆண்டு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. பணத்தைப் பெற்றுக்கொண்ட பொலிஸ் அலுவலர் நீண்ட நாள்களாக ஏமாற்றி வந்ததைத் தொடர்ந்து, மற்றைய பொலிஸ் அலுவலரால் வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவர் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் நேற்று முற்படுத்தப்பட்டார். சந்தேகநபரான பொலிஸ் அலுவலரை எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ,ம-125)

## 218...

கடத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டபடகும் கடற்படையால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகளின் பெறுமதி 87 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமாக இருக்கும் என்று நம்பப்படுகின்றது. மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், சந்தேகநபர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (அ,ம56,213)



## அனுப்பப்பட்டது...

னரும் கடும் நெருக்கடியை எதிர்கொண்டிருந்தனர். இந்த விடயத்தை, அமைச்சர் பிமல் ரத்நாயக்க மற்றும் அமைச்சர் சந்திரசேகர் ஆகியோரின் கவனத்துக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களான பவானந்தராஜா மற்றும் இளங்குமரன் ஆகியோர் கொண்டு சென்றனர்.

இதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, மருத்துவமனையின் உடனடித் தேவை கருதி ஒரு மின் பிறப்பாக்கி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (ம-26)

## யாழில்...

போராட்டம் இடம்பெறவுள்ளது. 'வல்லமை' சமூக மாற்றத்துக்கான போராட்ட இயக்கத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் பிரதான பேருந்துத் தரிப்பிடத்துக்கு முன்பாக இன்று காலை 9 மணியளவிலும், வேலணைச் சந்தியில் காலை 11 மணியளவிலும் இந்தப் போராட்டங்கள் இடம்பெறவுள்ளன. (ம-66)

## தொல்லியல்...

என்று நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் வினவியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

குருந்தூர்மலை அடிவாரத்தில் தமது பூர்வீக விவசாய நிலங்களில் பயிற்செய்கை மேற்கொள்ளும் நோக்கில் கடந்த 10ஆம் திகதியன்று தமிழ் விவசாயிகள் மூவர் பண்படுத்தல் செயற்பாட்டில் ஈடுபட்டபோது, தொல்லியல் பகுதிக்குள் பண்படுத்தினார்கள் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். பௌத்த பிக்குகள் பொலிஸாருக்கு வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையிலேயே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

குருந்தூர்மலை அடிவாரத்தில் காணப்படும் விவசாயக்காணிகள் பூர்வீகமாக தமிழ்மக்கள் விவசாயம் செய்துவந்த காணிகளாகும். அது தொல்லியத் திணைக்களத்தால் அடாத்தான முறையில் அபகரிக்கப்பட்டுள்ளது. குறித்த விவசாய நிலங்களில் கடந்த வருடம் கூட விவசாயிகளால் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இவ்வாறிருக்கையில் அவர்களைக் கைது செய்தமை ஏற்கக்கூடிய நடவடிக்கை அல்ல. எல்லாவற்றையும்விட, விவசாயிகள் அத்துமீறியிருந்தால் அது தொடர்பில் தொல்லியல் திணைக்களமே முறைப்பாடு செய்திருக்க வேண்டும்.

ஆனால் அதுதொடர்பில் பௌத்த பிக்குகளே முறைப்பாடு செய்துள்ளனர். இவ்வாறு பௌத்த பிக்குகள் முறைப்பாடுசெய்து பொலிஸார் கைதுசெய்வதெனில், தொல்லியல் திணைக்களம் பௌத்த பிக்குகளின் கூடாரமா? என வினவ விரும்புகின்றேன். இவ்வாறாக இனவாதத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளுக்கெதிராக அரசாங்கம் உடனடியாக நடவடிக்கையெடுக்கவேண்டும் - என்றார். (ம-26)

## ஏனைய...

வேறுபாடும் இல்லை என்று முன்னிலை சோசலிசக் கட்சியின் செயலாளர் குமார் குணரத்தினம் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கலாசாரம் மாற்றப்படும் எனக்கூறி ஆட்சிக்கு வந்தவர்கள் அதனை முறையாக செயற்படுத்தாததால்தான் பழைய அவதாரங்கள் மீண்டும் தலைதூக்க ஆரம்பித்துள்ளன. அதற்காக, மக்கள் அவர்களின் பக்கம் முற்றுமுழுதாகத் திரும்பிவிட்டனர் என்பது பொருள் அல்ல.

தேசிய மக்கள் சக்திமீது மக்கள் நம்பிக்கை வைத்திருந்தனர். அதனால்தான் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல்களின்போது மக்களால் அந்தக் கட்சிக்கு அமோகமான ஆதரவு வழங்கப்பட்டது.

அந்த நம்பிக்கை தற்போது வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்த உள்ளாட்சித் தேர்தலில் 23 லட்சம் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கவில்லை. அதேநேரம், ஏனைய கட்சிகளையும் விட தேசிய மக்கள் சக்திக்கு வாக்குகள் கிடைத்திருப்பதால், அந்தக் கட்சியினர் மீதான நம்பிக்கையை மக்கள் முழுமையாகக் கைவிடவில்லை என்றும் அர்த்தம்.

நாட்டின் தற்போதைய அரசியல் வேலைத்திட்டத்தை எடுத்துக்கொண்டால் தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி, ஐக்கிய தேசியக் கட்சி, பொதுஜன பெரமுன உள்ளிட்ட கட்சிகள் ஒரேமாதிரியான அரசியல், பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு இணங்கியுள்ளன. அவர்களுக்கு இடையில் எவ்வித வேறுபாடும் இல்லை.

சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும் ஒருமித்த கொள்கையிலேயே உள்ளனர். ஐ.நா.வின் தலையீடு தொடர்பான நிலைப்பாட்டிலும் மாற்றம் இல்லை. ஜனநாயகம் தொடர்பான பிரச்சினை, தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பிலும் இவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை, பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பிலும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உள்ளனர்.

எனவே, நாட்டில் தற்போது இரு அரசியல் அணிகள்தான் உள்ளன. வலதுசாரிகள் ஓரணியில் உள்ளனர். வலுவான இடதுசாரியாக நாம் போராடுவோம்' என்றார். (அ,ம-44)

## அதிகார...

போது விலைக்கு வாங்க முற்படுகின்றனர் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசிய மக்கள் சக்தியினரைத் தவிர ஏனைய அனைவரும் கள்வர்கள், ஊழல்வாதிகள் என்பதே அரசாங்கத்தின் தீவிர பிரசாரமாக இருந்தது. ஆனால் இன்று தாம் கூறியவற்றை மறந்து, ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டிருக்கிறது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மை உள்ளவர்கள் என்ற மமதையை மக்கள் இல்லாமலாக்கியமைக்கு நன்றிகூற வேண்டும். அரசாங்கத்தினர் வெறும் பேச்சுக்களால் காலம் கடத்துகின்றனர் என்பதை மக்கள் உணர்ந்துள்ளதால்தான் 23 இலட்சம் வாக்குகளை குறைத்துள்ளனர். வெறும் 6 மாதங்களுக்குள் 23 லட்சம் வாக்குகளை அரசாங்கம் இழந்துள்ளமை சாதாரண விடயமல்ல. இது பெரும்தோல்வியே - என்றார். (அ,ம-இ)

## அதீத...

போதைப்பொருளை நுகர்ந்துவந்த அவர், நேற்றுமுன்தினம் இரவு தனது வீட்டுக்குப் பின்புறமாக வீழ்ந்து கிடந்துள்ளார். இதையடுத்து, அவரை உடனடியாக மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற நிலையில், அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டாரென மருத்துவர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அளவுக்கு அதிகமான போதைப்பாவனையே இறப்புக்குக் காரணம் என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் தெரிய வந்துள்ளது. இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம்குமார் மேற்கொணர். (அ,ம-26)

## தமிழகக் கவிஞர் காளிதாஸின் உரையாடல் யாழில்

யாழ்ப்பாணம், மே 13

தமிழகக் கவிஞரும் விமர்சகருமான மா.காளிதாஸ் கலந்துகொள்ளும் உரையாடலொன்று யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

'எங்கள புத்தகங்கள்' அமைப்பின் அலுவலகத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி மாலை, 'நவீன கவிதையின் சமகாலத் தன்மை, மொழி, அரசியல், வெளிப்பாடு, வடிவம், அழகியல்' என்ற தொனிப்பொருளில் அவர் உரையாற்றவுள்ளார்.

இந்த நிகழ்வில் ஆர்வலர்கள் கலந்துகொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம)

## முடிகின்றது நீண்டபோர்?

உக்ரைனில் நிரந்தர அமைதியை ஏற்படுத்துவது தொடர்பில் ரஷ்ய அதிபர் புடினும், உக்ரைனின் அதிபர் ஷெலன்ஸ்கியும், மே மாதம் 15ஆம் திகதி நேரில் சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். துருக்கியின் இஸ்தான்புல் நகரில் இந்தப் பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளது. (ம)


## Vacancy

Data Entry, Accounts clevls, Receptionist, Management Tarinee, IT officer, Office Admin, Telephone Operator, Supervisor, Intern WepDevloper, Marketing, Designer

தொடர்புகளுக்கு:

077 773 3368, 076 098 4532

(CS 58229) D"

## வீடு வாடகைக்கு

யாழ் பலாலி வீதியில் இலுப்பையடி சந்திக்கு அருகாமையில் சகல வசதிகள் கொண்ட 3 அறைகள், வரவேற்பு அறை, சமையல் அறை, குளியல் அறைகளைக் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: 077 925 2370

## காணி விற்பனைக்கு

- யாழ் காரைநகர் பிரதான வீதியில் இருந்து 200m தூரம்.
- அரசடி பிள்ளையார் கோயில் வீதி மானிப்பாய் சந்தியில் இருந்து 1Km தூரம்.
- நன்னீர் கிணறு
- நல்ல குடியிருப்புச் சூழல்

**3 1/2 பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு:

077 638 5683, 076 755 8606

(CS/58228) J-1


## மரண அறிவித்தல்

அன்னையின் கரங்களில்
21 • 09 • 1950



ஆண்டவன் அடியினில்
11 • 05 • 2025

**கலாபூஷணம் சிற்றம்பலம் சிவானந்தராஜா**
(ஓய்வு பெற்ற படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

அளவெட்டி அலுக்கையைப் பிறப்பிடமாகவும், செட்டிகுறிச்சி பண்டத்தரிப்பினை வதிவிடமாகவும் கொண்ட சிற்றம்பலம் சிவானந்தராஜா அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (11.05. 2025) இறைவனடி சேர்ந்து விட்டார், அன்னார் அமரர்களான சிற்றம்பலம் பொன்னம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வனும், கமலாசனியின் (ஓய்வு நிலை ஆசிரியை) அன்புக் கணவரும் அருணின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றைய தினம் (12.05.2025) முற்பகல் 10 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் சம்பில்துறை இந்து மயானத்தில் இடம் பெற்றது. இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செட்டிகுறிச்சி
பண்டத்தரிப்பு

தகவல்:
குடும்பத்தினர்
0212252794

(CS 3153) D"

# பல்கலைக்கழக அனுமதிக்கான நிகழ்நிரல் விண்ணப்ப வசதி

யாழ்ப்பாணம், மே 13

கல்வியாண்டுக்குரிய பல்கலைக்கழக அனுமதிக்கான நிகழ்நிரல் விண்ணப்பங்களை இணுவில் பொது நூலக தகவல் தொழிநுட்ப மையத்தில் விண்ணப்பிக்க முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்வரும் 30 ஆம் திகதி வரை காலை 9.30 மணி தொடக்கம் மாலை 4.40 மணி வரை விண்ணப்பிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டை இலக்கம், கையடக்கத் தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் முகவரி க.பொ.த. சாதாரணதர மற்றும் உயர்தரப் பெறுபேற்றுச் சான்றிதழ்கள், விருப்பு ஒழுங்கில் தெரிவு செய்த கற்கைநெறி போன்றவற்றை விண்ணப்பத்தில் இணைக்கவேண்டும். மேலதிகத் தகவல்களை 021 2054435, 0779775650, 0774431851 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பை ஏற்படுத்தி அறிந்துகொள்ளலாம். இந்த நிறுவனம் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவால் தெரிவுசெய்யப்பட்ட யாழ்.மாவட்ட நிறுவனம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-25)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
09 • 04 • 1949



மறைவு
13 • 04 • 1949

கடந்த 13.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவர்

**கந்தையா மகாதேவன்**

(தலைவர், கூட்டுறவு சபை, யாழ் மாவட்டம்) (தலைவர், ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணயசங்கம்) (போசகர் முத்தமிழ் மண்றம் ஏழாலை)

அவர்களின் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் இன்று (13.05.2025) செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்களும் வருகைதந்து, அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

விழிசிட்டி வீதி, சூராவத்தை,
சுன்னாகம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(CS/28232) J-1



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் கடைப்பிடிக்கப்படும் நிலையில், உயிர்நீத்த உறவுகளின் ஆத்ம சாந்திப் பூசை வழிபாடுகள் நேற்று தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடத்தப்பட்டன. அதைத் தொடர்ந்து ஆலய முன்றலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. வடக்கு மாகாணசபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் தலைமையில் இவை முன்னெடுக்கப்பட்டன. (எ-இ)



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 13.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.